கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) தென்காசி

முன்னிலை:- திருமதி.கோ. அனுராதா, L.L.M., M.L.S.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2024 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் திங்கள்கிழமை

**இடைநிலை மனு எண்.2/2022**

அதன்

**அசல் வழக்கு எண்.372/2022**

பி. சுப்பையா ... மனுதாரர்/வாதி

..எதிர்..

பி.எல்.ஜெகநாதன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

(இடைநிலை மனு எண்.3/2023 மனுவில் 13.06.2023 அன்று பிறந்த உத்தரவின்படி 2 ஆம் எதிர்மனுதாரர் இந்த மனுவிலிருந்து விடுவிப்பு செய்யப்பட்டு, இடைநிலை மனு எண்.4/2023 மனுவில் 27.06.2023 அன்று பிறந்த உத்தரவின்படி மனு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இந்த இடைநிலை மனுவானது 23.02.2024 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சுந்தரேசன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி. முருகமுரளிதரன் அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவு

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 38 விதி 5 மற்றும் பிரிவு 151-ன் கீழ், மனுதாரர்/வாதிக்கு, எதிர்மனுதாரர் / பிரதிவாதியிடமிருந்து வசூலாக வேண்டிய பிராது தொகை ரூ.1,20,83,828.94 ற்கு நீதிமன்றத்தில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தக்க ஜாமீன் கொடுக்கவும் தவறும்பட்சத்தில் மனு தபசில் சொத்தை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பிரதான வழக்கானது இந்த மனுதாரரிடம், எதிர்மனுதாரர் பெற்ற கடன் தொகை ரூ.1,18,16,000/-ஐ எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்காக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் மேற்படி கடன் தொகையை செலுத்தாமல் ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் மனுத் தபசில் சொத்தை வில்லங்கப் பாராதீனங்ள் செய்துவிட முயற்சித்து வருகிறார். எதிர்மனுதாரர் அவ்வாறு செய்துவிட்டால் மனுதாரர்

எதிர்மனுதாரரிடமிருந்து கடன் தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடும். எனவே பிராது தொகையான ரூ.1,20,83,828.94 -ற்கு தகுந்தாற்போல் எதிர்மனுதாரர் தக்க ஜாமீன் பிறப்பித்துக் கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மனுத் தபசில் சொத்தை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிருரையின் சுருக்கம்</u>**:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. எதிர்மனுதாரர் சங்கரன்கோவில் நகரத்தில் ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் என்ற டெரிடவல்ஸ் தயாரிக்கும் நிறுவனத்தை நடத்தி வந்தார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் ஒரே ஊரைச் சேர்ந்த தூரத்து உறவினர்கள். எதிர்மனுதாரர் அவரது தொழில் அபிவிருத்திக்காக அவ்வப்போது மனுதாரரிடம் சில தொகைகளை கடனாகப் பெற்று அதனை திரும்பிச் செலுத்தி வந்தார். அதுபோன்று கடந்த 2009 ஆம் வருடம் ஜனவரி மாதம் ரூ.10,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக நிரப்பப்படாத புரோநோட்டுக்கள் மற்றும் முத்திரைத்தாள்களிலும் மேலும் ஒரு நிரப்பப்படாத காசோலையிலும் கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்துள்ளார். அதன்பின் இந்த எதிர்மனுதாரரும் அவரது மனைவியும் மேற்படி ஜெய்சர் கம்பெனியிலிருந்து விலகிக்கொண்டனர். மனுதாரரிடம் எதிர்மனுதாரர் செக்யூரிட்டிக்காக கொடுத்த மேற்படி காசோலையை வைத்துக்கொண்டு மனுதாரர் மோசடியாக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

'இம்'மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**:-

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பிரதான வழக்கானது இந்த மனுதாரரிடம், எதிர்மனுதாரர் பெற்ற கடன் தொகை ரூ.1,18,16,000/-ஐ எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்காக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் மேற்படி கடன் தொகையை செலுத்தாமல் ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் மனுத் தபசில் சொத்தை வில்லங்கப் பாராதீனங்ள் செய்துவிட முயற்சித்து வருகிறார். எதிர்மனுதாரர் அவ்வாறு செய்துவிட்டால் மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து கடன் தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடும். எனவே பிராது தொகையான ரூ.1,20,83,828.94 -ற்கு தகுந்தாற்போல் எதிர்மனுதாரர் தக்க ஜாமீன் பிறப்பித்துக் கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மனுத் தபசில் சொத்தை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டிருக்கிறார்.

7. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எதிர்மனுதாரர் சங்கரன்கோவில் நகரத்தில் ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் என்ற டெரிடவல்ஸ் தயாரிக்கும் நிறுவனத்தை நடத்தி வந்தார்.

மனுதாரரும், எதிர்மனுதாரரும் ஒரே ஊரைச் சேர்ந்த தூரத்து உறவினர்கள். எதிர்மனுதாரர் அவரது தொழில் அபிவிருத்திக்காக அவ்வப்போது மனுதாரரிடம் சில தொகைகளை கடனாகப் பெற்று அதனை திரும்பிச் செலுத்தி வந்தார். அதுபோன்று கடந்த 2009 ஆம் வருடம் ஜனவரி மாதம் ரூ.10,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக நிரப்பப்படாத புரோநோட்டுக்கள் மற்றும் முத்திரைத்தாள்களிலும் மேலும் ஒரு நிரப்பப்படாத காசோலையிலும் கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்துள்ளார். அதன்பின் இந்த எதிர்மனுதாரரும் அவரது மனைவியும் மேற்படி ஜெய்சர் கம்பெனியிலிருந்து விலகிக்கொண்டனர். மனுதாரரிடம் எதிர்மனுதாரர் செக்யூரிட்டிக்காக கொடுத்த மேற்படி காசோலையை வைத்துக்கொண்டு மனுதாரர் மோசடியாக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிட்டிருக்கிறார்.

12. இந்த மனுவை மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 38 விதி 5-ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரரிடம், இந்த எதிர்மனுதாரர் பெற்ற கடனிற்காக அவர் கொடுத்த காசோலையின் பேரிலான தொகையை எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்காகவே அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய கடன் தொகையை எதிர்மனுதாரர் செலுத்தாமல் மோசடி செய்யும் நோக்கத்தில் தபசில் சொத்தை வேறு மூன்றாம் நபர்களுக்கு கிரையம் செய்ய முயற்சித்து வருவதாகவும், எதிர்மனுதாரர் அவ்வாறு செய்துவிட்டால் எதிர்மனுதாரரிடமிருந்து வரப்பெற வேண்டிய தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடக் கூடும் என்று எனவே மனுதாரருக்கு பிராது தொகையான ரூ.1,20,83,828.94 -ற்கு தகுந்தாற்போல் எதிர்மனுதாரர் தக்க ஜாமீன் பிறப்பித்துக் கொடுக்க வேண்டியது அவசியமானது என்பதும் மனுதாரரின் பிரதான வாதமாகும். எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரிடம், எதிர்மனுதாரர் அவரது தொழில் வளர்ச்சிக்காக அவ்வப்போது கடன் பெற்றிருந்தாலும், அதனை உடனுக்குடன் திரும்பச் செலுத்திவிடுவார் என்றும், அவ்வாறு 2009 ஆம் வருடம் பெற்ற கடனுக்கு ஆதரவாக பாதுகாப்பு வகைக்காக கொடுக்கப்பட்ட கையெழுத்து மட்டும் இட்ட நிரப்பப்படாத காசோலையை வைத்துக்கொண்டு 13 வருடங்கள் கழித்து மனுதாரர் , எதிர்மனுதாரர் கொடுத்த காசோலைகளை பயன்படுத்தி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே அசல் வழக்கிற்கும், எதிர்மனுதாரருக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும், மனுதாரர் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லைஎன்றும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

13. இந்த வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் இடையே பல பணபரிவர்த்தனைகள் அதுவும் கோடிக்கணக்கில் நடைபெற்றுள்ளது தெரியவருகிறது. மேலும் இந்த மனுவானது தபசில் சொத்தைப் பொறுத்து தீர்ப்பிற்கு முன் ஜப்தி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர் தபசில் சொத்தை வில்லங்கப் பாராதீனம் செய்ய முயற்சிக்கிறார் என்றும், பிரச்சனைக்குரிய காசோலை மற்றும் புரோநோட்டின் உண்மை தன்மை குறித்தும் நிரூபிக்க வேண்டியது மனுதாரரின் கடமை ஆகும். மேலும், மனுதாரர் வசமே முதல்நிலை நோக்கு வழக்கும் இருந்திருக்க வேண்டியது அவசியமாகும். மேலும் இந்த வழக்கில் நடைபெற்றுள்ள பணபரிவர்த்தனைகளை ஆராயும்போது மனுதாரர்

பணத்தை வட்டிக்கு கடன் கொடுத்து வாங்கும்தொழிலில் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மூன்றாம் நபர் அவிடவிட்டில் எதிர்மனுதாரர் அவருக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்றுவிட்டு வெளியூர் செல்லப்போவதாக தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளதே தவிர மனுத் தபசில் சொத்துக்களை விற்கப்போவதாகவோ யாரிடம் விலை பேசுகிறார் என்றோ குறிப்பிட்டு கூறப்படவில்லை. எனவே இந்தச் சூழ்நிலையில் மனுத் தபசில் சொத்துக்களைப் பொறுத்து பற்றுகை உத்தரவானது பிறப்பிக்க இயலாது என்பதால் இந்தச் சூழ்நிலையில் இந்த மனு அனுமதிக்கக் கூடியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்) ஜி. அனுராதா
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்</u>**

இல்லை

(ஒம்) ஜி. அனுராதா
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.2/2022
அதன்
அசல் வழக்கு எண்.372/2022
உத்தரவு (நேரிய)
நாள்: 11.03.2024

---